தங்களின் அவசர கவனத்திற்காக

தொடர்பு எண்: **32/04/011/0001/002**

2020 யூலை 30

அனைத்துப் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களின் பொது முகாமையாளர்/ முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா/ அம்மணி

**சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் III - கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டத்தின் கீழ் பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்துச் சொந்தக்காரர்களுக்கு பேருந்துகளைத் திருத்தும் செலவினை ஈடுசெய்வதற்காக கடன்களை வழங்குதல்**

கொவிட்-19 தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்களுக்காக கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பிரதேச அபிவிருத்தித் திணைக்களத்தினால் விடுக்கப்பட்ட 2020.06.30ஆம் திகதியிடப்பட்ட இல.RDD/CGIS/WCL/2020/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 4.1ஆம் பிரிவின் பால் தங்களின் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறோம்.

பொதுப் போக்குவரத்தினை மேற்கொள்ளும் தனியார் பேருந்துச் சொந்தக்காரர்கள், இல.RDD/CGIS/WCL/2020/01 கொண்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் 4.1ஆம் பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்ட தகைமையுடைய வியாபாரங்களின் கீழ் உள்ளடக்கப்பட்டிருக்கின்றனர் என்பதனைத் தயவுசெய்து கவனிக்கவும். மேலும், பேருந்து திருத்தச் செலவுகள், குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் குறிப்பிடப்பட்ட தொழிற்படு மூலதனத்தின் கீழ் வருகின்றன.

இதன்படி, பொதுப் போக்குவரத்தில் ஈடுபட்டிருக்கின்ற தனியார் பேருந்துச் சொந்தக்காரர்களினால் அவர்களது பேருந்து திருத்தச் செலவினங்களைப் பூர்த்தி செய்வதற்காக விடுக்கப்படும் கடன்களுக்கான கோரிக்கைகளை சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் வசதி - கட்டம் III - கொடுகடன் உத்தரவாதம் மற்றும் வட்டி உதவுதொகை திட்டத்தின் கீழ் உள்ளடக்கிக் கொள்ளுமாறு இத்தால் நீங்கள் அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

இது தொடர்பில் தாங்கள் எடுக்கும் அவசர கவனம் அதிகளவிற்கு வரவேற்கப்படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

**ஒப்பம்**
**பணிப்பாளர்/ பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்**